**சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.**

**நாள் : 18.10.2024**

**வழக்கு எண் : OS. 253/2023**

**சாட்சி பெயர் : திரு.ஜான் ஜெபசிங்/ DW.1**

**குறுக்கு விசாரணை**

1. 2வது வாதி எனது உடன் பிறந்த சகோதரி. 1வது வாதி 2வது வாதியின் கணவர் ஆவார்.
2. நான் பண்ணைவிளையில் குடியிருக்கிறேன். வாதியும் பண்ணைவிளையில் தான் குடியிருக்கிறார்கள்.
3. வழக்கின் மொத்த விஸ்தீரணம் 3 3/4 செண்ட் ஆகும். அதன் கிழமேல் தென்வடல் அளவுகள் எனக்குத் தெரியாது. அதன் நத்தம் சர்வே எண்.1375/26 ஆகும். அதன் பழைய சர்வே எண்.70/8 ஆகும்.
4. வழக்கு சொத்தை பொறுத்து எனது உரிமையை காண்பிக்கக்கூடிய ஆவணம் எதுவும் என்னிடம் கிடையாது என்றாலும் எனது உடன் பிறந்த சகோதரிடமும் கிடையாது என்றால் சரிதான்.
5. வழக்கு சொத்தை பொறுத்து எனக்கோ எனது எனது உடன்பிறந்த 2வது பிரதிவாதிக்கோ மற்ற சகோதரர்களுக்கோ உரிமையோ கிடையாது என்றால் சரியல்ல. உரிமை உள்ளது.
6. மேற்படி உரிமையை காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.
7. வழக்கில் தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணங்கள் அனைத்தும் எனது உரிமையை காட்டக்கூடிய ஆவணங்கள் இல்லை என்றாலும் அதனால் அவை வழக்குக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் கிடையாது என்றாலும் சரியல்ல.
8. வாதிகள் தான் வழக்கு சொத்தை கம்பிகள் போட்டு அடைத்து வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.
9. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள 3ம் தரப்பினர்களான பொன்ராஜ் தனசிங் என்பவர் வழக்கிற்கு அவசிய தரப்பினர் இல்லை என்றாலும் ஆகையால் அவர்களை வழக்கில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றாலும் சரியல்ல.
10. மேற்சொன்ன பொன்ராஜ் தனசிங் என்பவர் என் உடன்பிறந்த சகோதரர். அவர்

வாதிகள் அனுபவத்திற்கு எந்த வித இடைஞ்சலும் செய்யதாததால் அவர்களை தரப்பினர்களாக இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

**11.** வழக்கு சொத்தை கம்பி வேலியிட்டு நான்தான் அடைத்தேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**12.** 2வது வாதி 3வது வாதிக்கு ஒரு செட்டில்மன்ட் ஆவணம் பிறப்பித்து கொடுத்தது பற்றி எனக்குத்தெரியும். அதை அவர் 2020 ம் ஆண்டு பிறப்பித்துக்கொடுத்தார்.

**13.** நத்தம் அடங்கல் தூய பதிவேடு 2வது வாதி செல்வி என்பவரின் பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல.

**14.** முத்து நாடார் என்பவர் எனக்கும் வாதிகளுக்கும் தாத்தா ஆவார். அவருக்கு மொத்தம் 7 பிள்ளைகள் ஆகும்.

**15.** 2வது வாதி மற்றும் எங்களுடைய தகப்பனார் பெயர் பேதுருநாடார். எனது தாயாரின் பெயர் மரியா ஆகும். எனது தகப்பனார் மற்றும் தாயார் தற்போது காலமாகிவிட்டனர்.

**16.** வழக்கு சொத்தை வாதி 32 வருடங்களாக பட்டா ஏற்பட்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஆகையால் வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் ஏற்படவில்லை என்றாலும் எதிரிடை கோரிக்கையும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**17.** என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் பொய்யாக கட்சி செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/—கே.நம்பிராஜன்

**சார்பு நீதிபதி,**

**திருவைகுண்டம்**